செய்தி வெளியீடு எண் : 526 நாள் : 13.03.2023

## செய்தி வெளியீடு

## 12.03.2023 அன்று பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 16 இந்திய மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட தூதரக வழிமுறைகள் வழியாக நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம்.

----

நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 16 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் 12.03.2023 அன்று இரண்டு விசைப்படகுகளுடன் (பதிவு எண்: IND-TN-08-MM-81 மற்றும் IND-TN-06-MM-7818) சிறைபிடிக்கப்பட்டதை மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்திய மீனவர்கள் இவ்வாறு இலங்கையைச் சேர்ந்த சிலர் / இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது கடந்த ஒரு மாதத்திற்குள் நடந்த மூன்றாவது சம்பவமாகும் என்றும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடி தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அடிக்கடி நிகழும் இதுபோன்ற சம்பவங்கள் ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து அவர்களின் மனதில் அச்ச உணர்வை உருவாக்குகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனது முந்தைய கடிதங்களில், இந்த விவகாரத்தை மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும், மாண்புமிகு வெளியுறவுத் அமைச்சர் அவர்களும் இந்த விவகாரத்தை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும், இருப்பினும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருவதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் நிரந்தரமாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்கவும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் உடனடியாக இதில் தலையிடவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 16 மீனவர்களையும், 102 மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாடு மீனவர்களின் 102 மீன்பிடிப் படகுகள் இலங்கை வசம் உள்ளதாகவும், இலங்கையால் விடுவிக்கப்பட்ட 6 மீன்பிடிப் படகுகள் இன்னும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 16 மீனவர்களையும், 102 மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவித்திட தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியள்ளார்.

## Text of the D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin addressed to the Hon'ble Prime Minister of India Thiru. Narendra Modi, requesting to initiate necessary diplomatic steps to secure the early release of all the 16 fishermen and 102 fishing boats that were apprehended by the Sri Lankan Navy.

I write this letter to draw your immediate attention to the apprehension of 16 fishermen along with their two Mechanised Fishing boats bearing Registration No: IND-TN-08-MM-81 and IND-TN-06-MM-7818 by Sri Lankan Navy on 12-3-2023. These two boats belong to Nagapattinam and Pudukkottai Districts fishermen.

This is the third incident of attack / arrest of Indian fishermen by the Sri Lankan Nationals / Navy within a month and as you are aware, these fishermen are solely dependent on their fishing activity for livelihood and such frequent incidents shatter the livelihood of poor fishermen and also create fear psychosis in their mind.

In my earlier letters, I have brought this issue to the notice of the Hon'ble Union Minister of External Affairs who has taken up the matter with the Government of Sri Lanka. Despite such steps being taken by the Government of India, such incidents continue to take place.

At this moment, I wish to seek your personal intervention in this regard to ensure that the traditional fishing rights of our fishermen are protected permanently and such that these incidents do not recur.

As of now, 102 fishing boats of Tamil Nadu are under the custody of Sri Lanka and 6 fishing boats which were released by Sri Lanka are yet to be repatriated back to India.

Therefore, I request that necessary diplomatic steps may be initiated to secure the early release of all the 16 fishermen and 102 fishing boats that were apprehended by the Sri Lankan Navy.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in